# கழக சார்பு அணிச் செயலாளர்கள் - சமூக வலைதளப் பதிவுகளை அதிகரிப்பீர்!

DMK IT WING

## தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளுக்கு – அமைச்சர் – முனைவர் டி.ஆர்.பி.ராஜா வேண்டுகோள்!

இந்தியாவுக்கே வழிகாட்டும் நம் திராவிட நாயகர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஐந்தாண்டு கால திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் இளைஞர் அணியும், மகளிர் அணியும் களத்திலும் தளத்திலும் முழுவீச்சுடன் செயல்பட்டு வரும் நிலையில், கழகத்தின் இதர சார்பு அணிகள் அவரவர் அணி சார்ந்த பொது மக்களிடம் கருத்துகளைக் கேட்டு சமூக வலைதளப் பக்கங்களில் அவற்றினைத் தொடர்ந்து பதிவிட வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எடுத்துக்காட்டாக மருத்துவ அணியினர் மருத்துவத்துறை சார்ந்தவர்களிடமும், பொறியாளர் அணியினர் இளம் ஐ.டி. ஊழியர்களிடமும், அயலக அணியினர் உலகெங்கும் திராவிடத்தால் பயன்பெற்று உயர்ந்துள்ள தமிழர்களிடமும், அமைப்புசாராத் தொழிலாளர் அணியினர் ஆட்டோ டாக்ஸி ஓட்டுநர்கள் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்களிடமும், விவசாய சங்கத்தினர் விவசாயிகளிடமும், விளையாட்டு மேம்பாட்டு அணியினர் இளம் வீரர்களிடமும் என அனைத்து அணிகளும் சமூக வலைதளங்களில் தொடர்ந்து பதிவிட்டு, தங்கள் பங்களிப்பை அதிகரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இப்பணியில் தகவல் தொழில்நுட்ப அணியினர் தங்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை 18.
நாள் :22.03.2026

அமைச்சர் - முனைவர் டி.ஆர்.பி.ராஜா
செயலாளர்
தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி

---

### அ.தி.மு.க. – பா.ஜ.க.வின் B டீமாக செயல்பட்டு வருகிறது என்பதற்கு உதாரணம்

# பா.ஜ.க. தலைமையில்தான் கூட்டணியே இயங்கிக் கொண்டிருக்கிறது!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!



தூத்துக்குடி, மார்ச் 24-
தூத்துக்குடி விமான நிலையத்தில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற கழகத் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது, அமெரிக்கா - ஈரான் போர் காரணமாக ஒன்றிய அரசு மக்களின் அத்தியாவசிய தேவையான பெட்ரோல், GAS எரிபொருள் தட்டுப்பாடுகளை சரி செய்ய வேண்டும். அதற்கு தேவையானதை ஏற்பாடு செய்ய வேண்டும் என்றார்.

தி.மு.க. கூட்டணியை பொறுத்தவரை பெரும்பாலும் எல்லாக் கூட்டணிகளும் முடிவு செய்யப்பட்டு விட்டது. ஒன்று, இரண்டு பேரிடம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் விரைவில் முடிவடைந்து விடும் என்றார்.

அ.தி.மு.க. போயஸ் கார்டனில் காத்துக் கிடந்தது போக டெல்லியில் காத்துக் கிடக்கிற நிலை இருக்கிறதே என்ற கேள்விக்கு, நாங்கள் தி.மு.க.வில் அதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறோம். கிட்டத்தட்ட பா.ஜ.க.வின் B டீமாக அ.தி.மு.க. மாறி இருக்கிறது. பா.ஜ.க.வின் தலைமையில் தான் இன்று கூட்டணியே இயங்கி கொண்டு இருக்கிறது. அ.தி.மு.க. என பெயர் இருந்தாலும் பி.ஜே.பி.யின் தலைமையில் செயல்பட்டு வருகிறது என்று கனிமொழி கருணாநிதி எம்.பி. பதில் அளித்தார்.

---

### தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்

# 'சொல் புதிது' திட்டத்தின் 11வது கூட்டம்!

## முனைவர் ம.இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, மார்ச் 24-
தமிழ்நாடு முதல்வர் அவர்கள் அளித்த நிதி உதவியில் செயற்படும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சொல் புதிது என்னும் திட்டத்தின் 11 வது கூட்டம் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் தலைமை வகித்தார். பேராசிரியர்கள் சா.சரவணன், கஸ்தூரி ராஜா, பாரதி பாலன், தி. ராஜா, பாரதி பாலன், தி. கமலி, விசயலட்சுமி இராமசாமி, ஊடகவியலாளர்கள் ராஜ் கண்ணன் மு முருகேசன், நீச்சல்காரன் இராஜாராமன் ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் பின்வரும் சொற்கள் இறுதி செய்யப்பெற்றன.

ஆங்கிலம் - இறுதி செய்யப்பட்டவை விவரம்:-

*Bewilderness* - திகைப்பு நிலை, *Biodiesel* - உயிரி டீசல், *Brain fog* - மூளை மந்தம்,

*Coaxial* - இணை அச்சு, *Course work* - பாடத்திட்டப் பணி, *Delulu* - மாய்மாலர், *Drinkware* - அருந்து கலன், *Geopolitical* - புவியரசியல், *Gig works* - சிறுகுறு பணிகள், *Hosting* - ஆக்கத்துணை, *Hybrid ATM* - பலவகைப் பணப்பணிப் பொறி, *Kitchenware* - அடுகலன், *Leg day* - கால்தசைப் பயிற்சி நாள், *Mouse jiggler* - சுட்டி அசைப்பான், *Paperwork* - ஆவணப்பணி, *Plasticware* - நெகிழிக்கலன், *Power laundry* - மின் சலவையகம், *Spot visit* - கள ஆய்வுப் பணி, *Tableaux* - நிலைக்காட்சி, *Telecaller* - பணிநோக்கு அழைப்பாளர், *Tours & travels* - சுற்றுலா & பயணப்பணி, *Tradwife* - இல்லாள்/ வாழ்க்கைத் துணை, *TTR* - பயணச்சீட்டுக் கண்காணி, *Unfreeze* - முடக்கம் நீக்கு / முடக்க நீக்கம், *Water service* - நீர்வழித் தூய்மை, *Welding works* - பற்றவைப்புப் பணி, *Wood works* - தச்சுப்பணியகம், *Work wife* - பணியிடத் துணை ஆகிய 30 சொற்கள் இறுதி செய்யப்பட்டன.

---

### தருமபுரி மாவட்டத்தில்

# 'ஸ்டேன்ட் அப் இந்தியா' திட்டத்தின் செயல்பாடுகள் என்ன ?

## மக்களவையில் ஆ.மணி கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 24-
தமிழ்நாட்டில் குறிப்பாக தருமபுரி மாவட்டத்தில் ஸ்டேன்ட் அப் இந்தியா திட்டம் பெண்களையும்,எஸ்.சி/எஸ்.டி பிரிவு தொழில்முனைவோரையும் முழுமையாக சென்றடைய ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா? இருப்பின் அது குறித்த விவரங்கள் என்ன என மக்களவையில் ஆ.மணி கேள்வி எழுப்பினார்.

கடந்த 3 ஆண்டுகளில் தருமபுரி மாவட்டத்தில் இருந்து இந்த திட்டத்தில் பெறப்பட்டுள்ள விண்ணப்பங்கள்,வழங்கப்பட்டுள்ள கடனுதவி,சராசரி செயலாக்க நேரம்,துறை வாரியான நிறுவன உருவாக்கம் குறித்து ஏதேனும் தரவுகள் உள்ளதா?இருப்பின் அதன் விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் இத்திட்டத்தை பரவலாக செயல்படுத்த மாவட்ட தொழில் மையம் மற்றும் பொது சேவை மையங்கள் மூலம் மேம்படுத்தப்பட்ட விழிப்புணர்வு பிரச்சா ரங்கள், கட்டமைக்கப்பட்ட கையடக்க வசதி,தொழில் முனைவோர் பயிற்சி மற்றும் மேம்படுத்தப்பட்ட வங்கி ஒருங்கிணைப்பு நடத்தப்பட்டுள்ளதா?

தமிழ்நாட்டில் தருமபுரி போன்ற பின்தங்கிய மாவட்டங்களில் ஸ்டேன்ட் அப் இந்தியா திட்டத்தினை விரிவாக்கபடுத்த ஏதேனும் சிறப்பு திட்டங்களோ அல்லது மாவட்ட வாரியாக இலக்குகளோ ஒன்றிய அரசால் பரிசீலிக்கப்பட்டுள்ளதா? இருப்பின் அதன் விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்த,நிறுவன நிலைதன்மை, வேலை வாய்ப்பு உருவாக்கம்,கடன் அணுகல் ஆகியவற்றின் அடிப்படையில் ஒன்றிய அரசு கண்காணித்து வருகிறதா? இருப்பின் அதன் விவரங்கள் என்ன? என்று ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் தருமபுரி எம்.பி.ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.



சென்னை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (22–3–2026) தமிழ்நாடு ஆதிராவிடர் – பழங்குடியினர் நல ஆணையத்தின் முன்னாள் தலைவர் – உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி எஸ்.தமிழ்வாணன் உடல்நலக் குறைவால் மறைவடைந்ததையொட்டி அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னாரது உடலுக்கு மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் கணபதி, பகுதி செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் மற்றும் குடும்பத்தினர் உள்ளனர்.

---

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி

# சமூக வலைதளப் பொறுப்பாளர்களுக்கு - கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, மார்ச் 24-
தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் உள்ள தோழமைக் கட்சிகளின் சமூக வலைத்தள பொறுப்பாளர்களுடன் தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் (மார்ச் 22) அண்ணா அறிவாலயம் முரசொலி மாறன் அரங்கத்தில் நடைபெற்றது. தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி தலைமை தாங்கினார்.

தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா ஒருங்கிணைப்பில் காங்கிரஸ் கட்சியின் நபில், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் ஆளூர் ஷாநவாஸ் எம்.எல்.ஏ., சஜின், திராவிடர் கழகத்தின் வி.சி. வில்வம், உடுமலை, வடிவேல், தே.மு.தி.க. செந்தில், சி.பி.எம். சிந்தன், தீக்கதிர் கண்ணன், சிபிஐ மூர்த்தி, மணிமாறன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சல்மான், ம.தி.மு.க. துரை கோவிந்தராஜு, மனிதநேய மக்கள் கட்சி முஸ்தாக் அகமது, முகமது கபீர், மக்கள் நீதி மையம் லட்சுமணன், சௌரப், செந்தில்குமார், எஸ்.டி.பி.ஐ கரீம், மனிதநேய ஜனநாயக கட்சி இப்ராஹிம் தாரிக் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சட்டமன்ற தேர்தல் களத்தில் மதச்சார்பற்ற கூட்டணியின் சமூக வலைதள ஒருங்கிணைப்பு பணிகள் குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சமூக வலைதள பொறுப்பாளர்கள் கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

---

# நடமாடும் மருத்துவமனைகளில் தமிழ்நாடு முதலிடம்!

**முதல் பக்கத் தொடர்ச்சி**

கர்ப்பிணிகளுக்கான மருத்துவ ஆலோசனைகளை வழங்கி தாய்சேய் நலனை உறுதி செய்துள்ளன. ரத்த அழுத்தம், நீரிழிவு, சிறுநீரகக் கோளாறு போன்ற தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்ட கோடிக்கணக்கான மக்கள் மருத்துவமனைக்கு அலையாமல், வீடுகளிலேயே தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, தடையின்றிப் பயனடைந்து வருகின்றனர்.

பிரமாண்டமான கட்டமைப்பைக் கொண்டிருப்பதாகக் கூறப்படும் பல பெரிய மாநிலங்கள், தமிழ்நாட்டின் இந்த மனிதநேயப் பணிக்கு ஈடுகொடுக்க முடியாமல் பல மைல் தூரம் பின்தங்கியுள்ளன என்பதை ஒன்றிய அரசின் தரவுகளே வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன.

**பா.ஜ.க. ஆளும் பின்தங்கிய மாநிலங்கள்!**

மக்கள் தொகையிலும், பரப்பளவிலும் இந்தியாவின் மிகப்பெரிய மாநிலமான உத்தரபிரதேசத்தில் வெறும் 170 வாகனங்கள் மட்டுமே பயன்பாட்டில் உள்ளன. பல ஆண்டுகளாக 'குஜராத் மாடல்' எனப் புகழப்படும் குஜராத் மாநிலத்தில் வெறும் 74 வாகனங்கள் மட்டுமே சேவையில் உள்ளன. நாட்டின் வர்த்தகத் தலைநகரான மகாராஷ்டிராவோ வெறும் 20 வாகனங்களை மட்டுமே இயக்கி மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது.

அடித்தட்டு மக்களுக்கான உயிர்காக்கும் மருத்துவச் சேவை என்பது சலுகையல்ல, அது ஒவ்வொரு குடிமகனின் அடிப்படை உரிமை என்பதை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு நிரூபித்துள்ளது. ஒன்றிய அரசின் இந்த அதிகாரப்பூர்வப் புள்ளிவிவரம், தமிழ்நாட்டின் 'திராவிட மாடல்' ஆட்சியின் 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற கொள்கை இந்தியாவிற்கே மிகச்சிறந்த வழிகாட்டி என்பதைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளது.

---

### தமிழ்நாட்டில்

# நடமாடும் மருத்துவமனைகள் செயல்படுத்த நிதி ஒதுக்கப்படுகிறதா?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 24-
தமிழ்நாட்டில் நடமாடும் மருத்துவமனைகள் MMUs செயல்படுத்த ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறதா? என்று மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

நாட்டில் 10 லட்சம் மக்கள் தொகைக்கு ஒரு நடமாடும் மருத்துவ வாகனப் பிரிவுக்கான மூலதனம் கூடிய செயல்பாட்டுச் செலவுகள் இரண்டையும் ஒன்றிய அரசு வழங்குகிறதா?

அப்படியானால், மாநில வாரியாக நாட்டில் இயக்கப்படும் மொத்த நடமாடும் மருத்துவ வாகனப் பிரிவுகளின் எண்ணிக்கை தருக?

கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் குறிப்பாக வேலூர் தொகுதியில் நடமாடும் மருத்துவ வாகனப் பிரிவுகளுக்கு (எம்எம்யு) ஒன்றிய அரசு நிதி வழங்கியுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள்; மற்றும்

நாட்டில் குறிப்பாக தமிழ்நாட்டில் பெண்களுக்கு மார்பக மற்றும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்களை பரிசோதிப்பதற்காக "Hospital on Wheels" நடமாடும் மருத்துவமனைகளுக்கு ஒன்றிய அரசு போதிய நிதியை ஒதுக்கியுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? என மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை ராஜாங்க அமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ் எழுத்துப் பூர்வமாக அளித்த பதில் வருமாறு:-

தேசிய சுகாதார இயக்கத்தின் (NHM) கீழ், தொலைதூர கிராமப்புறங்களில் தரமான சுகாதார சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்த, மொபைல் மருத்துவப் பிரிவுக்கான (MMU) நடமாடும் மருத்துவமனைகள் வழங்கிட அந்தந்த மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு, அவர்களின் அமலாக்கத் திட்டங்களில் (PIPs) அவர்கள் முன்வைக்கும் தேவைகளின் அடிப்படையில் நிதி ஆதரவு கிடைப்பதற்கு வழங்கப்படுகிறது.

10 லட்சம் மக்கள்தொகைக்கு ஒரு நடமாடும் மருத்துவப் பிரிவுக்கான (MMU) மூலதனம் மற்றும் செயல்பாட்டுச் செலவுகளை ஒன்றிய அரசு ஆதரிக்கிறது. நாட்டில் இயக்கப்படும் மொத்த MMU எண்ணிக்கை, மாநில வாரியாக இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. அவன் படி நாட்டிலே அதிக எண்ணிக்கையிலான நடமாடும் மருத்துவமனைகள் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. தமிழ்நாட்டில் தற்போது 425 நடமாடும் மருத்துவமனைகள் (MMUs) இயங்குகின்றது. இந்தியா முழுவதுமாக மொத்தம் 1453 நடமாடும் மருத்துவமனைகள் இயக்கப்படுகிறது.

தமிழ்நாடு மாநில அரசு வழங்கிய தகவலின்படி, வேலூர் தொகுதியில் 1 பழங்குடியினர் MMU உட்பட 7 MMU இயக்கப்படுகிறது. வேலூர் தொகுதிக்கு MMUகளுக்கு வழங்கப்பட்ட நிதியின் விவரம் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது:

2021-22ல் ரூ.41.64 லட்சம், 2022-23ல் ரூ.41.64 லட்சம், 2023-24ல் ரூ.41.64 லட்சம், 2024-25ல் ரூ.41.64 லட்சம், 2025-26ல் ரூ.41.64 லட்சம்

என ஆண்டுதோறும் ரூ.41.64 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், NHMன் கீழ் உள்ள நடமாடும் மருத்துவப் பிரிவுகள் (MMUs) மார்பக மற்றும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்களுக்கான ஸ்கிரீனிங் உட்பட ஆரம்ப சுகாதார மையத்தின் அனைத்து செயல்பாடுகளையும் மேற்கொள்கின்றன. தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் தேசிய சுகாதார இயக்கத்தின் (NHM) கீழ் இயங்கும் நடமாடும் மருத்துவப் பிரிவுகளுக்கு (MMUs) ஒன்றிய அரசு நிதியுதவி வழங்குகிறது. NHM இன் கீழ் MMU களின் செயல்பாட்டு வழிகாட்டுதல்களை அமைச்சகத்தின் இணையதளத்தில் உள்ள பின்வரும் இணைப்பில் அணுகலாம்.

*https://nhm.gov.in/images/pdf/programmes/mmu/Mobile Medical Units.pdf*

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையை ஏற்று ,சேலம் கிழக்கு மாவட்டம் வீரபாண்டி வடக்கு ஒன்றியம் வேம்பாடிதளம் ஊராட்சி பா.ம.க.வைச் சேர்ந்த பாட்டப்பன் தலைமையில் 20 பேர் அக்கட்சியில் இருந்து விலகி கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். அப்போது மாவட்ட துணை செயலாளர் க.சுரேஷ்குமார், ஒன்றிய செயலாளர் சு.சதீஷ்குமார் உடனிருந்தனர்.